வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: மலர்விழி

தேதி: 23.01.2025 நேரம்: மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

இந்தியா, நேதாஜி சுபாஷ் சந்திர போசிடம் இருந்து, உணர்வூக்கம் பெற்று, உலகின் 3ஆவது பெரிய பொருளாதாரமாக மேம்படும் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மஹா கும்பமேளாவில், மவுனி அமாவாசை தினத்தன்று, 10 கோடிப் பேர் புனித நீராடுவார்கள் என எதிர்பார்க்கப் படுவதால், பிரயாக்ராஜ் ரயில்வே கோட்டம், 150 சிறப்பு ரயில்களை இயக்க திட்டமிட்டுள்ளது.

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் பள்ளி உளவியல் மற்றும் ஹிப்னாடிசம் பற்றிய 2 நாள் சர்வதேச மாநாட்டை, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் நாளை தொடக்கி வைக்கிறார்.

கைவினைக் கலைஞர்களுக்கான பிரதமரின் விஸ்வகர்மா திட்டப் பயனாளிகளில், புதுச்சேரியைச் சேர்ந்த இருவர், புதுடெல்லி குடியரசு தின விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்க உள்ளனர்.

---

மோடி-நேதாஜி 1 (16)

இந்தியா, நேதாஜி சுபாஷ் சந்திர போசிடம் இருந்து, உணர்வூக்கம் பெற்று, உலகின் 3ஆவது பெரிய பொருளாதாரமாக மேம்படும் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இன்று 128ஆம் ஆண்டு நேதாஜி பிறந்தநாளை ஒட்டி, ஒடிசா மாநிலம் கட்டக்கில் உள்ள பர்ப்பாத்தி கோட்டையில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள 3 நாள் விழாவில், வீடியோப் பதிவு மூலம் பிரதமர் உரையாற்றினார். முன்னேறிய இந்தியாவை உருவாக்கும் இலக்கை நாடு எட்ட, மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து

பாடுபட வேண்டும் என வலிறுத்தினார். நாட்டின் விடுதலைக்காக நேதாஜி பல சவால்களை எதிர்கொண்டதை பிரதமர் நினைவு கூர்ந்து, நேதாஜியை போல மக்களும், அவரவர் சொந்த வசதியை பாராமல், **செயல் திறனில் சிறப்பது குறித்து** முக்கிய கவனம் செலுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். ஒற்றுமைதான் நாட்டிற்கு முக்கியம் என்பதால், நாட்டை பலவீனப்படுத்தும் முயற்சிகள் குறித்து, மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும், அவர் குறிப்பிட்டார். தமது அரசு, டெல்லி செங்கோட்டையில் **நேதாஜி அருங்காட்சியகம்** அமைத்து, இண்டியா கேட்டில், நேதாஜிக்கு சிலை நிறுவி இருப்பதையும், அந்தமான் நிக்கோபாரில் ஒரு தீவுக்கு நேதாஜியின் பெயர் சூட்டப் பட்டதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

மோடி-நேதாஜி 2 (17)

இந்தியா மேலும், மேலும் முன்னேற, சாதகமான சூழல் தற்போது ஏற்பட்டுள்ளதாகவும், உலகமே இந்தியாவை வியந்து நோக்குவதாகவும், பிரதமர் கூறினார். கடந்த பத்தாண்டுகளில் 25 கோடி பேர் வறுமையில் இருந்து மீட்கப் பட்டுள்ளதாகவும், நாடு முழுவதும் நவீன உள்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இந்தியாவின் ராணுவ பலமும், பெருமளவில் அதிகரித்து வருவதாக, அவர் மேலும் கூறினார்.

பராக்கிரம தின விழாவில், ஒடிசா மாநில முதலமைச்சர் திரு. மோகன் சரண் மாஜி, மற்றும், அவரது அமைச்சரவை சகாக்களும் கலந்து கொண்டனர். நேதாஜி பிறந்த நேரத்தை குறிக்கும் வகையில், இன்று பிற்பகல் மணி 12.15க்கு, முதலமைச்சர் திரு. மோகன் சரண் மாஜி, விழா மேடையில் இருந்து சங்கொலி எழுப்பினார். அதே நேரத்தில் ஒடிசா மாநிலம் முழுவதும் சங்கொலி எழுப்பவும் மாநில அரசு ஏற்பாடு செய்திருந்தது.

கட்டாக் பராக்கிரம தினவிழாவில், நாடெங்கிலும் இருந்து சேகரிக்கப்பட்ட நேதாஜி நினைவு பொருட்களும், பிரமாண்டமான நேதாஜி ஓவியங்களும், காட்சிப்படுத்தப் பட்டுள்ளன. நேதாஜி சுபாஷ்

சந்திரபோஸின் இந்திய தேசிய ராணுவத்தில் சேவை புரிந்த முதுபெரும் வீரர்களும் இவ்விழாவில் பங்கேற்றுள்ளனர்.

----------------------------

மோடி-அஞ்சலி (8)

நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் பிறந்தநாளை ஒட்டி, பிரதமர் திரு.நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், சம்விதான் சதன் என்னும் பழைய நாடாளுமன்றக் கட்டிடத்தின் மைய மண்டபத்தில் உள்ள நேதாஜியின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். மக்களவைத் தலைவர் திரு. ஓம். பிர்லா, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்டவர்களும் இதில் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் பங்கேற்ற பள்ளி மாணவர்களை, பிரதமர் சந்தித்து கலந்துரையாடினார்.

----------------------------

மோடி-தாக்கரே (5)

இன்று பாலாசாகேப் தாக்கரே பிறந்த நாளை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி அன்னாருக்கு புகழாரம் சூட்டி உள்ளார். மக்கள் நலன் மற்றும் மஹாராஷ்ட்ர மாநிலத்தின் வளர்ச்சிக்கான உறுதிப்பாட்டிற்காக, பரவலாக மதிக்கப்பட்டு, நினைவில் கொள்ளப்படுபவர் பால் தாக்கரே என்றும், அவர் மாறாத கொள்கைப் பற்றுடன், இந்தியக் கலாச்சாரத்தின் பெருமிதத்தை பெருக்கி வந்ததாகவும், சமூக ஊடகப் பதிவில் பிரதமர் கூறியுள்ளார்.

----------------------------

கும்பமேளா 1 (15)

உத்தரபிரதேஷ் மாநிலம் பிரயாக்ராஜில் மஹா கும்பமேளா நடைபெறும் பகுதியில், ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷன் சார்பில் அமைக்கப் பட்டுள்ள முகாம் அலுவலகத்தை, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறைச் செயலர் திரு. சஞ்சய் ஜாஜு இன்று நேரில் பார்வையிட்டு, விழா பற்றிய செய்திகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மறு ஆய்வு செய்தார். தகவல்-ஒலிபரப்பு அமைச்சகம் உட்பட, பல்வேறு அமைச்சகங்கள் சார்பில்

அமைக்கப் பட்டுள்ள கண்காட்சி அரங்குகளையும் அவர் பார்வையிட்டார். திரிவேணி சங்கமத்தில், பக்தர்கள் ஒன்றாக புனித நீராடுவதால், ஒற்றுமையே கும்பமேளாவின் முக்கியச் செய்தி என்று, செய்தியாளரிடம் பேசுகையில் அவர் கூறினார். முன்னதாக, திரு. ஜாஜூ இன்று காலை, திரிவேணி சங்கமத்தில் புனித நீராடினார்.

இதற்கிடையே, மவுனி அமாவாசை தினத்தன்று, சுமார் 8 முதல் 10 கோடி பக்தர்கள் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடுவார்கள் என, எதிர்பார்க்கப் படுவதால், பிரயாக்ராஜ் ரயில்வே கோட்டம், சுமார்150 சிறப்பு ரயில்களை இயக்க திட்டமிட்டுள்ளது. பிரயாக்ராஜில் உள்ள

கும்பமேளா 2 (7)

அனைத்து 9 ரயில் நிலையங்களில் இருந்தும் சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளதாக, ரயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பயணிகளிடையே குழப்பத்தை தவிர்க்கும் வகையில், வண்ணக் குறியீட்டுடன் கூடிய டிக்கெட்டுகளை வழங்கவும், தங்கும் வசதிகளை அதிகரிக்கவும், ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. மஹா கும்பமேளாவில் இதுவரை, சுமார் 9 கோடியே 73 லட்சம் பேர் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி இருப்பதாகவும், விழா ஏற்பாடுகளுக்கான ஆணையம் தெரிவித்துள்ளது.

---------------------------

எல். முருகன் (19)

இந்தியப் பள்ளி உளவியல் சங்கமும், வதோதராவில் உள்ள ஹிப்னாடிச அகாடமியும் இணைந்து, புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் நடத்தும் 2 நாள் சர்வதேச மாநாட்டை, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் நாளை தொடக்கி வைக்கிறார். பேராசிரியர் பாஞ். ராமலிங்கம் எழுதிய உளவியல் சொற்களஞ்சியம் நூலை அவர் வெளியிட்டு, ஹிப்னாடிச அகாடமியின் வாழ்நாள் சாதனையாளர் விருது, மற்றும், பள்ளி உளவியல் சங்கத்தின் தலைமைத்துவ விருதுகளையும், வழங்கி சிறப்பிக்கிறார். புதுச்சேரி சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், மாநில உள்துறை அமைச்சர் திரு. நமச்சிவாயம் உள்ளிட்டோர், தொடக்க விழாவில் பங்கேற்க உள்ளனர்.

வாழ்வில் எல்லா நிலைகளிலும் ஹிப்னாடிசம் என்ற கருப்பொருள் அடிப்படையில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள இம்மாநாட்டில், உள்நாடு மற்றும் பல்வேறு வெளிநாடுகளில் இருந்து, சுமார் 500 பிரதிநிதிகள் கலந்து கொள்கிறார்கள். கல்விச் சூழல், டிஜிட்டல் ஆரோக்கியம், வாழ்க்கை-வேலை சமநிலை உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளில் ஹிப்னாடிசம் என்னும் மனோவசிய விஞ்ஞானத்தின் பயன்பாடு குறித்து, துறை சார்ந்த வல்லுனர்களின் சிறப்பு சொற்பொழிவுகள், இம்மாநாட்டில் இடம்பெற உள்ளன. 32 ஆய்வுக் கட்டுரைகளும் மாநாட்டில் சமர்பிக்கப்படும் என ஏற்பாட்டளார்கள் தெரிவித்துள்ளனர்.

----------------------------

*விஸ்வகர்மா* (10)

நாட்டின் பாரம்பரிய கைவினைக் கலைகளை தொழில்நுட்ப அடிப்படையில் மறுவடிவமைத்து, கைவினைக் கலைஞர்களின் நிலையை மேம்படுத்தும் நோக்கத்துடன் மத்திய அரசு அமல்படுத்தி வரும் பிரதமரின் விஸ்வகர்மா திட்டத்தின் கீழ்ப் பயிற்சி முடித்து, தொழில் மேம்பாட்டுக் கடன் பெற்ற கைவினைக் கலைஞர்களில், புதுச்சேரியைச் சேர்ந்த இருவர், இம்முறை, புதுடெல்லியில் நடைபெறும் குடியரசு தினவிழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்க உள்ளனர். இவர்களில் ஒருவரான தச்சுத் தொழிலாளி சரவணன், இன்று எமது செய்தியாளரிடம் பேசுகையில், குடியரசு தினவிழாவில் பங்கேற்பது குறித்து தாம் பெருமை அடைவதாகத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்....

(வாய்ஸ்)

----------------------------

*புதுச்சேரி-நேதாஜி* (6)

நேதாஜி பிறந்த நாளான இன்று புதுச்சேரியில், லாஸ்பேட் உழவர்சந்தை சந்திப்பில் உள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், அமைச்சர்கள் திரு. பிஆர்என் திருமுருகன்-திரு. சாய் சரவணன் குமார், சட்டமன்ற உறுப்பினர் திரு.

வைத்தியநாதன் ஆகியோர், அரசு சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

----------------------------

*ஏனாம்-நேதாஜி* (5)

ஏனாமில், ஃபெர்ரி சாலையில் உள்ள நேதாஜி சிலைக்கு, மண்டல நிர்வாக அதிகாரி திரு. ஆர். முனுசாமி, காவல் துறை கண்காணிப்பாளர் திரு. ராஜசேகரன் உள்ளிட்டோர், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். நாட்டின் விடுதலைக்காக நேதாஜி மேற்கொண்ட துணிகர முயற்சிகளை இவர்கள் நினைவு கூர்ந்தனர்.

---------------------------

*காரைக்கால்* (9)

தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு, காரைக்கால் மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியதன் பேரில், தேர்தல் துறை இன்று, காரைக்கால் அரசு பொது மருத்துவமனையின் மகப்பேற்றுப் பிரிவு வளாகத்தில், கல்லூரி மாணவர்களுக்கான, சுவர் ஓவியப் போட்டி ஒன்றை நடத்தியது. வருவாய்ப் பிரிவு துணை ஆட்சியர் திரு. அரஜூன் ராமகிருஷ்ணன், நிர்வாகப் பரிவு துணை ஆட்சியர் திரு. செந்தில்நாதன் மற்றும் தேர்தல் துறை அதிகாரிகள், போட்டி நடைமுறைகளை பார்வையிட்டனர். இப்போட்டியில் தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த விழிப்புணர்வு ஓவியங்களுக்கு, வரும் 25ஆம் தேதி, தேசிய வாக்காளர் தினத்தன்று பரிசுகள் வழங்கப்படும்.

---------------------------

*படிப்புதவித் திட்டம்* (12)

நடுநிலைக் கல்விக்கு மேல் மாணவர் இடை நிற்றலை தவிர்ப்பதற்கான, மத்திய அரசின், தேசிய வருவாய் வழி மற்றும் திறன் படிப்புதவித் திட்டத்தின் கீழ், புதுச்சேரியின் அனைத்து 4 பகுதிகளிலும், எழுத்துத் தேர்வு, வரும் மார்ச் 1ஆம் தேதி நடைபெற உள்ளது. அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில், தற்போது 8ஆம் வகுப்பில் பயிலும் மாணவ-மாணவியர், தத்தம் பள்ளிகள் மூலம், புதுச்சேரி பள்ளிக் கல்வி இயக்ககத்தின் இணைய தள முகவரியில், இதற்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்களை சமர்ப்பிக்க கடைசி நாள் பிப்ரவரி 10ஆம் தேதி என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் 125

மாணவர்களுக்கு, 9 முதல், 12ஆம் வகுப்பு வரையிலான 4 ஆண்டுகளுக்கு, ஆண்டுதோறும் 12 ஆயிரம் ரூபாய் கல்வி உதவித் தொகை, மத்திய கல்வி அமைச்சகத்தால் வழங்கப்படும்.

---------------------------

*ரயில் விபத்து* (11)

மஹாராஷ்ட்ர மாநிலம் ஜல்காம் ரயில் நிலையம் அருகே, நேற்று தீவிபத்து பற்றிய புரளி காரணமாக, ரயிலை நிறுத்தி கீழே இறங்கிய, புஷ்பக் எக்ஸ்பிரஸ் ரயில் பயணிகள் மீது, பக்கத்துப் பாதையில் வந்த கர்நாடக எக்ஸ்பிரஸ் ரயில் மோதியதால் ஏற்பட்ட விபத்தில் பலியானோர் எண்ணிக்கை, 13ஆக அதிகரித்துள்ளது. இதில் 10 பேரின் உடல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக, துணை முதலமைச்சர் திரு. அஜித் பவார், இன்று புனேயில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். மாநில அமைச்சர்கள் திரு. கிரீஷ் மகாஜன், திரு. குலாப் ராவ் பாட்டீல், மாவட்ட ஆட்சியர் திரு. ஆயுஷ் பிரசாத் ஆகியோர், விபத்து நடந்த இடத்தை நேரில் சென்று பார்வையிட்டதாகவும், சம்பந்தப்பட்ட பிரிவில், ரயில் போக்குவரத்து மீண்டும் தொடங்கி விட்டதாகவும் அவர் கூறினார்.

---------------------------

*ஹாக்கி* (5)

மகளிர் ஹாக்கி இண்டியா லீக் போட்டித் தொடரில், இன்று மாலை ராஞ்சியில் நடைபெறும் போட்டியில், **ஒடிசா வாரியர்ஸ்** அணி, **டெல்லி எஸ்.ஜி பைப்பர்ஸ்** அணியுடன் மோதுகிறது. ஆடவர் பிரிவில், ரூர்கேலாவில் நடைபெறும் போட்டியில், **தமிழ்நாடு டிராகன்ஸ்** அணி, **ஹைதராபாத் டூஃபான்ஸ்** அணியுடன் மோத உள்ளது.

---------------------------

*தேர்தல் ஆணையம்* (8)

புதுடெல்லியில், தேர்தல் ஆணையம் சார்பில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள 2 நாள் சர்வதேச மாநாட்டை, தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ் குமார் இன்று தொடக்கி வைத்தார். தேர்தல் முறைகள் பற்றிய சர்வதேசப் பேரவையின் தலைவர் உட்பட, பல்வேறு பன்னாட்டு

அமைப்புகள், மற்றும், 13 நாடுகளின் தேர்தல் நிர்வாக அமைப்புகளில் இருந்து, சுமார் 30 பிரதிநிதிகள் இம்மாநாட்டில் பங்கேற்றுள்ளனர். உலக அளவில், தேர்தல் மேலாண்மையில் காணப்படும் முக்கிய பிரச்சனைகள் குறித்து, இம்மாநாட்டில் விவாதிக்கப் படுகிறது.

---------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

இந்தியா, நேதாஜி சுபாஷ் சந்திர போசிடம் இருந்து, உணர்வூக்கம் பெற்று, உலகின் 3ஆவது பெரிய பொருளாதாரமாக மேம்படும் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மஹா கும்பமேளாவில், மவுனி அமாவாசை தினத்தன்று, 10 கோடிப் பேர் புனித நீராடுவார்கள் என எதிர்பார்க்கப் படுவதால், பிரயாக்ராஜ் ரயில்வே கோட்டம், 150 சிறப்பு ரயில்களை இயக்க திட்டமிட்டுள்ளது.

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் பள்ளி உளவியல் மற்றும் ஹிப்னாடிசம் பற்றிய 2 நாள் சர்வதேச மாநாட்டை, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் நாளை தொடக்கி வைக்கிறார்.

கைவினைக் கலைஞர்களுக்கான பிரதமரின் விஸ்வகர்மா திட்டப் பயனாளிகளில், புதுச்சேரியைச் சேர்ந்த இருவர், புதுடெல்லி குடியரசு தின விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்க உள்ளனர்.